MAH05036

ஸ்ரீ :

ஹரி : ஓம்.

இந்த உலகத்தில் பகவானின் அவதாரங்கள் பத்து. அந்த தசாவதாரங்களில் பூர்ண அவதாரங்கள் மூன்று. ந்ருஸிம்ஹ அவதாரம், ராமாவதாரம், க்ருஷ்ணாவதாரம். அதிலும் மிகவும் முக்கியமானது என்றால் க்ருஷ்ணாவதாரத்த எல்லா ஆழ்வார்களும் ஆசார்யன்களும் கொண்டாடுகிறார்கள். இரண்டு அவதாரங்களிலும் இல்லாத மகிமை இவருக்கு என்ன என்று கேட்டால் சௌலப்யம். ஏன் என்றால் குழந்தை பருவத்தில் நிறைய சேஷ்டைகள் செய்து எல்லோரும் பார்த்து ரசிக்கும்படியாக இருந்தது பகவானுடைய குழந்தைப் பருவம். கண்ணனின் யௌவன பருவத்த யாரும் ரஸிக்கல, குழந்தைப் பருவத்த தான் எல்லாரும் ரஸிச்சா. சின்ன குழந்தையதானே எல்லாரும் ரஸிப்பா, ஒரு ஆஸ்பத்திரில ஒரு ஆள் போனார், அவருக்கு ஏதோ உடம்பு சரியில்ல எல்லோரையும் கடுப்பு அடுச்சுண்டே இருக்கார், எல்லாரும் அவர திட்றா, அவருக்கு ஆத்திரமா வருது, ஒரு அம்மா தன் கைக்குழந்தையுடன் ஆஸ்பத்திரில அவருக்கு பக்கத்து இருக்கைல வந்து ஒக்காந்தா, எல்லாரும் சொன்னா அவர் பக்கத்துல ஒக்காராத, குழந்தைய எங்கையாவது அடுச்சுட போறார்னு சொன்னா. இவ அதெல்லாம் காதுல வாங்கிக்காம அவன் பக்கத்துல போய் ஒக்காந்துட்டா. குழந்தை என்ன செய்யும் பொதுவா, குழந்தையும் யானையும் ஒண்ணு, யானை சும்மா இருக்காது, எதாவது பாத்துன்டே இருக்கும், எதையாவது புடிச்சு இழுத்துண்டே இருக்கும், அதே மாதிரி இந்த குழந்தையும் என்ன பண்ணித்து, அந்த ஆத்திரப்பட்டுண்டே இருந்தான்ல, அவன் இப்படி திரும்பினான், அவன் மூஞ்சில போய் இந்த குழந்தை கைய வெச்சுது, அந்த பிஞ்சு விரல் அவன் மூஞ்சில பட்டதும் அவன் சிரிக்க ஆரமிச்சுட்டான், இப்படி ஆத்திரமா இருந்தவன் திடீர்னு சிரிக்க ஆரமிச்சுட்டான், என்ன காரணம் என்று கேட்டால் சின்ன குழந்தையின் ஸ்பரிஸம் என்பது ஈஸ்வரனுடைய ஸாந்நித்யம். குழந்தையின் ஸ்பரிஸம் பட்டதும் அவனுடைய எல்லா கோவமும் இல்லாம போச்சு. அதுனால அந்த குழந்தைப் பருவம் என்பது இயல்பான ஒன்று. இந்த உலகத்துல மொத்தம் மூன்று விஷயத்த மாத்த முடியாது அது இயல்பு, இயற்க்கை, பகவான். இந்த மூன்றும் யாருக்காகவும் மாறாது, யாரலையும் இத மாத்த முடியாது. அதே போல் பகவானும் யாருக்காகவும் தன்னை மாத்திக்க மாட்டார், யாராலையும் அவர மாத்த முடியாது, யாருக்காகவும் தன் கொள்கையை மாத்திக்க மாட்டார். தர்மம் என்னவோ அதான், அண்ணனா இருந்தாலும் தம்பியா

இருந்தாலும் தர்மம் தர்மம் தான். இந்த கொள்கையில் இருந்தால் தான் நாடு நன்னா இருக்கும். தப்பு செஞ்சுட்டு ஸாரி, எனக்கு தெரியாது, இப்படி சொல்லிண்டே இருந்தா நம்ம முன்னேற முடியாது. யார்க்கிட்டேயும் நம்ம ஸாரி கேக்கணும்னு அவஸியம் இல்லை, எனக்கு தெரியாதுனு சொல்லவும் அவஸியம் இல்லை அப்படின்னா நம்ம எல்லாம் தெரிஞ்சுண்டு நடந்துண்டா ஸாரி சொல்லணும்னு அவஸியம் இல்லை, தப்பு செய்யப்போறது இல்லையே, தப்பு செஞ்சாதானே ஸாரி சொல்லணும் பயத்துல. பயத்துல நம்ம தப்பிக்கர்துக்கு கைல வெச்சுண்டுஇருக்கர வார்த்தை தான் ஸாரி, மன்னிச்சுக்கோங்கோ, க்ஷமிக்கணும். அப்ப இந்த ஸாரி சொல்லும் போது எல்லாரோட கோவமும் குறையற்து ஏன்னா அந்த ஸாரிங்கற வார்த்தைல ஒரு குழந்தைத்தனம் இருக்கு எப்படி அந்த ஆத்திரப்பட்டவன் மேல அந்த குழந்தையோட ஸ்பரிஸம் பட்டதும் எப்படி அவன் சாந்தம் ஆறானோ, அதுமாதிரி, இப்ப ஒரு பூனை இருக்கு, அது நம்மளவிட பலஹீனமானது தான், நம்ம அடிக்க போனா அது எப்படி நம்மள பாத்த்தும் கீழ தழஞ்சுக்கறது, அப்படி தழஞ்சுக்கும் போது நம்ம மனசுல ஒரு கருணை ஏற்பட்றதோனோ, ஐயோ பாவம், ஒரு க்ஷணம், அத அடிக்க வேணாமேனு தோண்றதோனோ, அது இயல்பு, அதான் பகவானோட இயல்பு, பகவான் குழந்தையா இருக்கும் போது நிறைய லீலைகள் பண்ணியிறுக்கார். அதுல அவரோட குலம் என்ன, யதுகுலம், யதுகுலத்தில் பிறந்தார், அதுனால அவன் பேர் என்ன யதுகுல நந்தனன், அதுனால அந்த வம்ஸத்த பத்தி சொல்லக்கூடியதான, க்ருஷ்ணனோட பரிபூர்ணமான லீலைகளை அதாவது மஹாத்மியத்த சொல்றதுக்கு ஒரு புஸ்தகம் எழுதியிறுக்கார், ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சார்யன்ல மூத்தவறான ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன், அது யாதவாத்புதையம். யாதவ குலத்துல க்ருஷ்ணன் என்ன லீலைகள் செஞ்சார், என்ன பண்ணார், அதாவது ஸ்வாமி தேசிகனோட க்ரந்தங்கள் எல்லாத்துலையுமே ஸாந்தரஸம் தான் ப்ரதானமா இருக்கும், கருணாரஸம் தான் ப்ரதானமா இருக்கும் வேற எந்த ரஸமும் இருக்காது. அதாவது அவருக்கு வேண்டியது என்ன உலக இயல்புல, உலகத்தோட வாழ்க்கைல நம்ம ஸாந்தமா இருக்கணும்னு தான் எல்லாரும் ஆசைபடுவோம், எல்லாரும் நல்லா இருக்கணும்னு ஆசைபட்றதுக்கு தான் நம்ம உழைக்கறோம், அந்த உழைப்பு எதுக்காக நம்ம ஸாந்தமாகணும், நம்ம அமைதியாகணும், எப்ப அமைதியாயிருப்போம், நிறைய பணம் வந்தா அமைதியாயிருப்போம், பணம் கைல இருந்தா அமைதி வருமா இல்லையா, என்கிட்ட நிறைய பணம் இருக்கு ஆனா அமைதி இல்லை அப்படினா, அது நீ தேடிண்டது, பணமே இல்லாதவா அமைதியா இருக்காளா இல்லையா, தபஸ்விகள்லாம் அந்த காலத்துல அமைதியா தான்

இருந்தா, அவா கைல பணம் இருந்துதா, பணம் வெச்சுண்டு இருந்த ராஜா தான் இவாளுக்கு ஸல்யூட் அடிச்சான், எந்த ரிஷிகளாவது போய் ராஜாவ பாக்க போகும் போது, ராஜா லாம் கூப்புடுவா, எங்க நாட்டுக்கு வாங்கோ மழை பெய்யலனு ருஷ்யஸ்ருங்கர கூப்டா, மழை பெய்தது, காரணம் என்ன அவா தர்மத்தை கடைபுடிச்சா, அப்ப அவர்களுக்கலாமே புலப்படாத பகவான், க்ருஷ்ணனை பாக்கணும்னா ரொம்ப காலம் தபஸ் பண்ணனும், அதாவது நம்ம யாராவது பகவான பாக்கணும்னா என்ன பண்ணனும், அதுக்கு உண்டான வழிகள் லாம் நிறைய செய்யணும், என்ன செய்யணும்னு கேட்டா முதல்ல ஸரீரம் சுத்தமா இருக்கணும், இரண்டாவது வாக்கு சுத்தமா இருக்கணும், மூன்றாவது மனசு சஞ்சலம் அடையாம சுத்தமா இருக்கணும், இந்த மூணும் ப்ரதமசுத்தி ஏற்பட்டா, பெருமாள் அடையாளத்துக்குரியதான, சமுத்திரம் இருக்குல்ல, அதுல ஒரே ஒரு டம்ளர் ஜலம் எடுத்தோம்னா, அந்த சமுத்திர ஜலம் அந்த டம்ளர்ல இருக்கா இல்லையா, ஆனா அந்த சமுத்திரமே அந்த டம்ளர்ல இருக்குனு அர்த்தமா, அந்த மாதிரி பகவானுடைய க்ருபைய அடையணும்னா அது சமுத்திரம் மாதிரி, அதுல இந்த ப்ரதமசுத்திங்கறது என்ன டம்ளர்ல புடிச்ச ஜலம் மாதிரி தான், இந்த மாதிரி இன்னும் நிரைய இருக்கு, அதாவது இந்த சமுத்திரத்தோட ஜலம் எல்லாத்தையும் அடையணும்னா நம்ம என்ன பண்ணனும், நிறைய தபஸ் பண்ணனும், தபஸ் பண்ணிண்டே இருக்கணும், எப்பவுமே பெருமாளோட சிந்தனையாவே இருக்கணும், இந்த உலக இயல்ப மறந்துடணும், இந்த உலகத்தோட வாசனையே நம்ம மேல படக்கூடாது. எல்லாத்தையும் அந்த பெருமாள்கிட்ட ஒப்படைச்சுட்டு நம்ம அமைதியாயிருக்கணும், எந்த ஞாபகமும் வரக்கூடாது, அதாவது ஒரு operation theatre ல operation பண்ணும் போது அந்த மருத்துவருக்கு எப்படி அந்த வயத்துல இருக்கற கட்டி எங்க இருக்கு, எவ்வலோ பெருஸா இருக்கு, அத எங்க கீறினா எப்படி கறைக்கலாங்கற ஸிந்தனை மட்டும் தான் இருக்குமே தவிர வெற எந்த விதமான சலணமும் இருக்காது, அப்படி சலணம் ஏற்பட்டா கை நடுங்க ஆரம்பிக்கும், அப்படி கை நடுங்கினா என்ன ஆகும் ஏடாகூடமா எங்கயாவது குத்திடும், அதுவும் heart operation லாம் பண்றவா எவ்வளோ ஜாக்கிரதையா எப்படி இருப்பா, ரொம்ப ஸாந்தமா இருப்பா, டாக்டர்ஸ் எல்லாருமே எப்படி இருப்பா ஸாந்தமா தான் இருப்பா, ஸாந்தமா தான் இருக்கணும், அப்படி இருந்தா தான் அவாளுக்கு ஞாபக சக்தி இருக்கும், அப்ப ஸாந்தமா இருந்தா என்ன ஆகும், அமைதியா இருந்தா எதையுமே spotiveஆ எடுத்துக்கணும், எல்லா விஷயத்தையும் எப்படி எடுத்துக்கணும், எந்த கடினமான விஷயத்தையும் எப்படி handle பண்ணனும், எல்லாத்தையும் ரொம்ப

சாதாரணமான முறைல தேர்ந்தெடுக்க ஆரம்பிச்சுட்டா நமக்கு ஸாந்தம் வருதுனு அர்த்தம், அப்ப அந்த கடிணமான கோவமான வெலைலாம் நம்ம கிட்ட வரதுக்கு பயப்படும். அதாவது நல்லது கெட்டது எல்லாத்தையும் ஒரே மாதிரி பாவிக்கணும், அதாவது பகவான் க்ருஷ்ணன் என்ன சொல்றார் ”சுக துக்க யோகோ ஸமஜித்த : “ அதாவது சுகமும், துக்கமும் வரும் போது, சுகம் வரும் போது ரொம்ப கூத்தாட கூடாது, அதாவது சுகம் வரும் போது அந்த சந்தோஷம் நிதானமா இருக்கணும்.